## செய்தி வெளியீடு
## இலங்கையின் தேசிய கணக்கு மதிப்பீடுகள்
## மூன்றாம் காலாண்டு - 2023
## உற்பத்தி அணுகுமுறை
## அடிப்படை ஆண்டு - 2015

# தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்

**நிதி பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சி**

இலங்கையின், 2023 ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டுக்கான (ஜூலை 1 முதல் செப்டம்பர் 30 வரை) உற்பத்தி அணுகுமுறையால் நடப்பு, நிலையான (2015) விலையில் மதிப்பிடப்பட்ட மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP), அது தொடர்பான பொருளாதாரக் குறிகாட்டிகளும் தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களத்தால் வெளியிடப்படுகிறது.

நிலையான விலையில் (2015), இலங்கைக்கான மொத்த உள்நாட்டு உற்பத்தி 2022 ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டில், ரூ. 2,900,654 மில்லியனில் இருந்து 2023 ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டில் ரூ. 2,946,107 மில்லியனாக அதிகரித்துள்ளதாக பதிவாகியுள்ளது.

2023 ஆம் ஆண்டின் மூன்றாவது காலாண்டில் ஆண்டுக்கு ஆண்டு GDP வளர்ச்சி வீதம் நேர் 1.6 சதவீதமாக பதிவாகியுள்ளது.

2023 ஆம் ஆண்டின் மூன்றாவது காலாண்டில் விவசாயம், கைத்தொழில் துறை மற்றும் சேவை நடவடிக்கைகள் முறையே 3.0 சதவீதத்தினாலும் 0.3 சதவீதத்தினாலும் 1.3 சதவீதத்தினாலும் விரிவடைந்துள்ளது.

உள்ளே

**நிர்வாக சுருக்கம்- 2**
**பின்னணி- 3**
**விவசாய துறையின் செயற்பாடு- 3**
**கைத்தொழில் துறையின் செயற்பாடு -3**
**சேவைத் துறையின் செயற்பாடு- 4**

**Source Publication**

http://www.statistics.gov.lk/NationalAccounts/StaticalInformation/GDP2015

# நிர்வாக சுருக்கம்

தேசிய கணக்கு மதிப்பீடுகள் பற்றிய அறிக்கையை வெளியிடுகையில், ஆண்டுக்கு ஆண்டு மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி வீதம், 2023 ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டில் 1.6 சதவீத நேரான வளர்ச்சியென மதிப்பிடப்பட்டுள்ளது.

இதற்கமைவாக நிலையான விலையில் (2015), 2022 ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டிற்கான இலங்கைக்கான மொத்த உள்நாட்டு உற்பத்தியானது ரூ. 2,900,654 மில்லியனில் இருந்து, 2023 ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டில் ரூ. 2,946,107 மில்லியனாக அதிகரித்துள்ளதாக பதிவு செய்யப்பட்டது.

பின்வரும் படம் 1, 2018 ஆம் ஆண்டு முதல் 2023 ஆம் ஆண்டு வரையிலான மூன்றாம் காலாண்டின் மெய்யான மொ.உ.உ நிலைகளில் ஏற்பட்ட மாற்றங்களை பிரதிபலிக்கிறது.

எமப் 1
**மெய்யான மொத்த உள்நாட்டு உற்பத்தி - மூன்றாம் காலாண்டு 2018-2023**




**Source:**
Department of Census and Statistics, Sri Lanka

மேலும், 2023 ஆம் ஆண்டின் மூன்றாவது காலாண்டிற்கான இலங்கைக்கான மொத்த உள்நாட்டு உற்பத்தி நடப்பு விலையில் 2022 ஆம் ஆண்டின் அதே காலாண்டில் பதிவு செய்யப்பட்ட ரூ. 6,586,602 மில்லியனில் இருந்து ரூ. 6,906,891 மில்லியனாகவும், அதிகரித்துள்ளதுடன் இது 4.9 சதவீத நேர் மாற்றத்தையும் பதிவு செய்கின்றது.

பொருளாதாரத்தின் மூன்று முக்கிய பொருளாதார நடவடிக்கைகள்; 'விவசாயம்', ’கைத்தொழில்’ மற்றும் 'சேவைகள்' ஆகியவை மொத்த உள்நாட்டு உற்பத்தியில் தற்போதைய விலையில் முறையே 7.8 சதவீதம், 28.1 சதவீதம் மற்றும் 57.5 சதவீதம் பங்களித்துள்ளன, அதே சமயம் 2023 ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டில் 'பொருட்கள் மீதான வரிகள் மானியங்கள் நீங்கலாக' என்ற கூறு மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 6.5 சதவீத பங்களிப்பை அளித்துள்ளது.

மேலும், 2023 இன் மூன்றாம் காலாண்டில், விவசாயத் துறை, கைத்தொழில் மற்றும் சேவைத் துறைகள் முறையே 3.0 சதவீத்த்தினாலும், 0.3 சதவீத்த்தினாலும், 1.3 சதவீத்த்தினாலும் விரிவாக்கம் அடைந்துள்ளது.

## பின்னணி

2023 ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டின் ஆண்டுக்கு ஆண்டு மொ.தே.உ வளர்ச்சி வீதம், முந்தைய ஆண்டின் அதே காலாண்டில் (மூன்றாவது காலாண்டில்) அறிக்கையிடப்பட்ட மெய்யான மொ.தே.உ மதிப்புடன் ஒப்பிட்டு கணக்கிடப்படுகிறது.

2023 ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டு அன்னியச் செலாவணியின் நிச்சயமற்ற தன்மையுடன் தொடங்கினாலும், மெதுவாக வளர்ந்து கொண்டிருந்த பொருளாதாரம் பற்றிய எதிர்பார்ப்புகள் நேரான நிலையாக மாற்றப்பட்டன. மாற்று விகிதத்தில் ஏற்பட்ட சாதகமான மாற்றத்திற்கு இணையாக உள்ளீட்டு செலவுகள் குறைக்கப்பட்டன, அதே நேரத்தில் பொருளாதாரத்தில் கடன்களுக்கான தேவை முன்பை விட மெதுவான விகிதத்திற்கு படிப்படியாகக் குறைக்கப்பட்டது (2022 இல் மூன்றாவது காலாண்டு). சுற்றுலாத் துறையின் விரிவாக்கத்துடன், இந்த காலாண்டில் சேவை ஏற்றுமதியில் சாதகமான தாக்கத்தை காண முடியும். அதன்படி, தங்குமிடம், உணவு மற்றும் பானங்கள் சேவை நடவடிக்கைகள் அதிக நேர் வளர்ச்சியைப் பதிவு செய்துள்ளன, அதே நேரத்தில் விவசாய நடவடிக்கைகளும் 2023 இன் மூன்றாம் காலாண்டில் நேரான வளர்ச்சி விகிதத்தைப் பதிவு செய்துள்ளன. மேலும், சில உற்பத்தித் கைத் தொழில்களும் இந்த காலாண்டில் விரிவாக்கங்களை பதிவு செய்துள்ளன.

## விவசாய துறையின் செயற்பாடு

2023 ஆம் ஆண்டின் மூன்றாவது காலாண்டில், விவசாய நடவடிக்கைகள் 3.0 சதவீத விரிவாக்கத்தை பதிவு செய்துள்ளன.
2022 ஆம் ஆண்டின் இ

விவசாய நடவடிக்கைகளின் விரிவாக்கம் முக்கியமாக 'தானியங்களின் வளர்ச்சி' (33.2 சதவீதம்), கடல் மீன்பிடித்தல் மற்றும் கடல் மீன் வளர்ப்பு (27.5 சதவீதம்). 'நெல் வளர்ச்சி' (23.2 சதவீதம்), 'விவசாயத்துக்குத் துணைபுரியும் நடவடிக்கைகள்' (20.9 சதவீதம்), 'விலங்கு உற்பத்தி' (5.4 சதவீதம்) 'பழங்களின் வளர்ச்சி' (5.4 சதவீதம்) 'கோப்பி, கொக்கோ மற்றும் ஏனைய பானப்பயிர்களின் வளர்ச்சி' (3.8 சதவீதம்), 'காய்கறிகள் வளர்ச்சி' (3.2 சதவீதம்), 'கரும்பு வளர்ச்சி' (3.1 சதவீதம்).

எவ்வாறாயினும், சில விவசாய பொருளாதார நடவடிக்கைகளுக்கான'தாவரப் பெருக்கம்' (36.8 சதவீதம்), 'காடுகள் மற்றும் மரம் வெட்டுதல்' (30.7 சதவீதம்)' நன்னீர் மீன்பிடித்தல் மற்றும் நன்னீர் மீன் வளர்ப்பு' (10.3 சதவீதம்), மற்றும் 'எண்ணெய் சார்ந்த பழங்களின் வளர்ச்சி' (6.1 சதவீதம்), ஏனைய பல்லாண்டு பயிர்களின் வளர்ச்சி' (3.9 சதவீதம்), வாசனை பொருட்களின் வளர்ச்சி' (3.6 சதவீதம்), இறப்பர் வளர்ச்சி' (2.8 சதவீதம்), மற்றும் தேயிலை வளர்ச்சி' (1.4 சதவீதம்), போன்ற இந்த காலாண்டில் மறையான வளர்ச்சி வீதங்களாக பதிவு செய்துள்ளன. .

## கைத்தொழில் துறையின் செயற்பாடு

2023 ஆம் ஆண்டின் மூன்றாவது காலாண்டில், ஒட்டுமொத்த கைத்தொழில் துறை நடவடிக்கைகள் 0.3 சதவீதம் விரிவடைந்ததாக பதியப்படுகிறது. 2022 ஆம் ஆண்டின் இதே காலாண்டுடன் ஒப்பிடும் போது 21.3 சதவீத மறை வளர்ச்சி பதியப்பட்டிருந்த்து.

கைத்தொழில் துறை நடவடிக்கைகளில், 'கட்டுமானம்' 5.5வீத மறை வளர்ச்சியாக பதிவு செய்துள்ளன. ‘சுரங்கமகழ்தல் மற்றும் கல்லுடைத்தல்’ நடவடிக்கைகள் இந்த காலாண்டில் 0.7 சதவீத விரிவாக்கம் பதிவு செய்துள்ளன. ஒட்டுமொத்த உற்பத்தித் துறை கைத்தொழில் துறை 2.1 சதவீத்த்தினால் உயர்ந்ததுடன் நேர் மாற்றத்தை சுட்டிகாட்டுகிறது. சில உற்பத்தி நடவடிக்கைகள் 2022 ஆம் ஆண்டின் இதே காலாண்டுடன் ஒப்பிடும்போது விரிவாக்கத்தை பதிவு செய்துள்ளன. இருப்பினும், இந்த காலாண்டில் 'கரி மற்றும் சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலிய பொருட்கள் உற்பத்தி' (168.6 சதவீதம்), உலோகம் மற்றும் உருவாக்கப்பட்ட உலோகப் பொருட்களின் உற்பத்தி' (29.9 சதவீதம்), 'தளபாடங்கள் உற்பத்தி' (28.7 சதவீதம்), ஏனைய உலோகமல்லாத பொருட்களின் உற்பத்தி (17.5 சதவீதம்), 'உணவு, பானங்கள் மற்றும் புகையிலைப் பொருட்களின் உற்பத்தி' (11.8 சதவீதம்), மற்றும் 'இரசாயனப் பொருட்களின் உற்பத்தி' (4.2 சதவீதம்).

இருப்பினும் 'மரம் மற்றும் மர பொருட்கள் தயாரிப்பு' (19.0 சதவீதம்), 'இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களின் உற்பத்தி' (18.9 சதவீதம்), இறப்பர் மற்றும் பிளாஸ்டிக் பொருட்களின் உற்பத்தி' (16.5 சதவீதம்), ‘புடவை உற்பத்தி, ஆடை மற்றும் தோல் தொடர்பான தயாரிப்பு’ மற்றும் ‘பிற தொடர்புடைய பொருட்கள்’ (10.1 சதவீதம்), 'இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களின் உற்பத்தி' (11.4 சதவீதம்), 'காகிதம் மற்றும் காகித பொருட்கள் உற்பத்தி' (1.5 சதவீதம்), ஆகியன 2022 ஆம் ஆண்டின் மூன்றாவது காலாண்டுடன் ஒப்பிடும் போது பதிவாகியுள்ளது.

'மின்சாரம், எரிவாயு, நீராவி மற்றும் குளிரூட்டி வழங்கல்' செயல்பாடு மற்றும் 'நீர் சேகரிப்பு, சுத்திகரிப்பு மற்றும் வழங்கல்' நடவடிக்கைகள் இந்த காலாண்டில் 4.2 சதவீதம் மற்றும் 11.9 சதவீத விரிவாக்கத்தை பதிவு செய்துள்ளன.

## சேவைத் துறையின் செயற்பாடு

2023 ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டில், சேவைத் துறையின் செயல்திறன் 1.3 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது. 2022 ஆம் இதே காலாண்டுடன் ஒப்பிடும் போது 4.2 சதவீத சுருக்கம் பதிவிடப்பட்டிருந்த்து

காலாண்டு மதிப்பாய்வின்படி, ‘நிதி சேவை நடவடிக்கைகள்’ 0.5 சதவீதம் குறிப்பிடத்தக்க சரிவை பதிவு செய்துள்ளன. மேலும்,காப்புறுதி சேவைகள் 29.6 நேரான வளர்ச்சியை பதிவிட்டிருந்த்து மேலும், 'தங்குமிடம், உணவு மற்றும் பானங்கள் வழங்கும் நடவடிக்கைகள்' (34.9 சதவீதம்) , ‘நிகழ்ச்சிகள் மற்றும் ஒளிபரப்பு நடவடிக்கைகள்' (10.9சதவீதம்), 'பொருட்கள் மற்றும் பயணிகள் போக்குவரத்து மற்றும் களஞ்சியப்படுத்தல் உள்ளிட்ட நடவடிக்கைகள்' (5.7 சதவீதம்), 'அஞ்சல் மற்றும் கூரியர் சேவைகள்'(3.3 சதவீதம்) தொழில் முறை சேவைகள்' (1.9

சதவீதம்), 'கல்வி சேவைகள் (1.8 சதவீதம்) 'மனித சுகாதார சேவைகள்' (1.0 சதவீதம்), 'மொத்த மற்றும் சில்லறை வர்த்தகம்' (0.9 சதவீதம்), 'பிற தனிப்பட்ட சேவைகள்' (0.6 சதவீதம்), ஆகியன 2023 ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டில் கனிசமான நேர் வளர்ச்சி வீதங்களைப் பதிவு செய்துள்ளன.

மேலும், 'IT நிரலாக்க ஆலோசனை மற்றும் தொடர்புடைய நடவடிக்கைகள்' (20.1 சதவீதம்), 'வதிவிடச் சொத்துடமை உள்ளிட்ட உண்மைச் சொத்து நடவடிக்கைகள்' (5.7 சதவீதம்) 'தொலைத்தொடர்பு சேவைகள்' (2.6 சதவீதம்), போன்ற நடவடிக்கைகள் 2023 ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டில் மறை வளர்ச்சி வீதங்களாக பதிவு செய்துள்ளன.

2023 ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டின் தேசிய கணக்குகள் மதிப்பிடலின் மேலும் விரிவான விபரங்கள் தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தின் இணையத்தளத்தில்

)http://www.statistics.gov.lk/NationalAccounts/StaticalInformation/GDP2015)
வெளியிடப்பட்டுள்ளன .

பி. எம். பி அனுர குமார,
பணிப்பாளர் நாயகம்

**The Vision of DCS**

"To be the leader in the region in producing timely statistical information to achieve the country's development goals."

**The Mission of DCS**

"Making contribution in the socioeconomic development of the country by providing accurate timely statistics, more Effectively by means of new technology, and utilising the services of dedicated staff under a strategic leadership to become a prosperous nation in the globalised environment."

**Department of Census & Statistics,**
**Sankyana Mandiraya**
No. 306/71, **Polduwa Road,Battaramulla**

info@statistics.gov.lk
+94 11 2147000
+94 11 2147011
**statistics.gov.lk**

**This publication is produced by the National Accounts Division**
**3rd floor, Department of Census and Statistics**
National.accounts@statistics.gov.lk
**+94 112147071** **+94 112877938**